கூட்டத்துடன் இணைந்த நூலக விடுதி கட்ட மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து திட்ட அறிக்கை பெறப்பட்டு, இப்போது நம் மேல் நடவடிக்கையில் உள்ளது. சுற்றுலா தங்கும் விடுதி கட்டுவது பற்றி தேவைக்கேற்பவும் நிதிவசதிகள் கிடைத்த பின்னும் யோசிக்கப்படும்.

நாங்குநேரி தாலுகா அரசர்பத்து பகுதியில் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் திட்டம்.

*வினா எண். 146.—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா மஞ்சுவினை ஊரில் உள்ள அரசர்பத்து பகுதியில் விவசாயிகளின் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) இப்படி பாதிக்கப்படுகிற பகுதிகளில் பயிர்க் காப்பீடு திட்டம் ஒன்றை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இப்படி பயிர்களை அழிக்கக்கூடியவை யானைகள் மட்டுமல்லாது குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையோரத்தில் உள்ள பயிர்கள் பூராவற்றையும் காட்டுப் பன்றிகள் அதேபோல் குரங்குகள் மற்றும் காட்டில் வாழக்கூடிய மற்ற மிருகங்கள் அழித்துக்கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் பயிர்களைப் பாதுகாக்க அரசு விசேஷ நடவடிக்கைகள் ஏதாவது எடுக்குமா? மேலும் அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசே நிவாரணம் அளிக்க ஏதாவது உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்படி வன விலங்குகள் அல்லது வேறு மிருகங்கள் மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கு அவ்வப்போது விவசாயிகளிடமிருந்து வருகிற விண்ணப்பங்களைப் பரிசீலித்து தனியாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் பொதுவாக ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பெற்று இப்படிப் பட்ட பயிர்கள் பாழாகிற நேரத்தில் அதில் பாதிக்கப்பட்டோருக்கு காப்பீட்டுத் தொகை வழங்குகிற ஒரு திட்டத்தைப் பற்றி இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனோடு அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : இப்போது யானைகள் மட்டுமல்லாது காட்டு மிருகங்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. ஆதலால் மிருகங்களை அதிக அளவிற்கு உற்பத்தி செய்வதற்கு காட்டுப் பகுதிகளில் உள்ள நிலங்களையெல்லாம்—விவசாய நிலங்களையெல்லாம் அரசே ஆர்ஜிதம் செய்து எடுத்து அந்தப் பகுதிகளில் மேற்கொண்டு மிருகங்கள் அதிக அளவில் வளருவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தக் காட்டு விலங்குகள் பயிர்களை நாசமாக்குகிறபோது உதவி பெறும் அந்த விவசாயிகள் தற்போது மாவட்ட வனத்துறை அதிகாரிகளை அணுகி சர்டிபிக்கேட் வாங்கவும் பிறகு வருவாய்த் துறை அதிகாரிகளை அணுகி சர்டிபிக்கேட் வாங்கவும் வேண்டிய நிலை இருப்பதன் காரணமாக செலவு அதிகமாகிறது. அதனால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை எளிது படுத்தினால் அந்த விவசாயிகளை பாதுகாக்க முடியும். குறிப்பாக ரூ. 500-க்கு அழிவு ஏற்பட்டிருக்கிறது என்றால் செலவே ரூ. 500 ஆகிறது என்ற நிலைமை காரணமாக அவர்களுக்கு நிவாரணமே கிடைக்காமல் போய் விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஆகவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் எளியமுறையில் உதவித் தொகை பெற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நிகழ்ந்து விட்ட அந்தச் சம்பவங்களின் தொடர்பாக நஷ்டயீடு கோருகிறவர்களைப் பற்றிய விவரங்களை முழுமையாக தெரிந்து கொண்டாலன்றி அரசாங்கம் அவர்களுக்கு உதவுவதில் சிக்கல்கள் ஏற்படலாம். அதற்காகத்தான் இப்படிப்பட்ட நடைமுறைகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை நிறைவேற்ற, எந்த அளவிற்கு அவர்களின் சிரமங்களைக் குறைக்க முடியுமோ அதுபற்றிய பரிசீலனையை அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS